RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1317

# அகப்பொருள் கூறும் இலக்கணநூல்களில் அகத்திணைப்பகுப்பு ஓர் ஆய்வு

**ம. நந்தினி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அவிநாசி, திருப்பூர்-641654, தமிழ்நாடு, இந்தியா

# The Classification of Agatthinai in the Grammatical Books that deals with Love-Genre

**M. Nandhini** [a, *]

[a] Department of Tamil, Government Arts and Science College, Avinashi, Tiruppur- 641654, Tamil Nadu, India

* Corresponding Author: buterfly2014tamil@gmail.com

Received: 29-05-2022
Revised: 05-09-2022
Accepted: 19-09-2022
Published: 21-11-2022

Check for updates

**ABSTRACT**

It is a great principle of the ancient Tamils that the way of life and culture of the people will depend on the nature of the land on which they live. In that sense, the activities corresponding to the respective land are referred to as "discipline" or "Thinai". There are generally two types of thinai, namely, domestic and public. The ego is the expression of the feelings of the heart. Accordingly, if we study Agathinai, the word Agathinai refers to the life of the people. This paper examines the tendency in tribal Tamil society to the transformation of intraocular pleasure into bliss and then into carnal pleasure in the dominant feudal society. This study will help those who seek to understand the domestic life of Tamils through grammar in the future to gain a proper understanding. Moreover, the study of grammar helps in identifying the Tamil community as a patrilineal society when the dominant mentality takes root in the society.

**Keywords:** Intimacy, Bliss, Sensuality, Timelessness, A Sense of Dominance.

## முன்னுரை

அகத்திணைப் பகுப்பானது ஒவ்வொரு இலக்கணப் பிரதிகளிலும் அவ்வக்காலத்திய கொள்கைகளுக் கேற்ப மாறுபட்டுள்ளது. ‘அகத்திணை’ குறித்து தொல்காப்பியம் முதல் மற்ற இலக்கண நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ள விதம் குறித்து ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

காட்டு மிராண்டி வாழ்க்கையில் தொடங்கி நாகரிக வாழ்வின் உச்சத்தில் இன்றைய மனித சமூகம் பயணித்துக்கொண்டிருக்கிறது. மாற்றங்களனைத்தும் படிப்படியாக நிகழ்ந்தவையேயன்றி உடனடியாக நிகழ்ந்தவையன்று. மனிதன் பரிணாமவளர்ச்சியில் தனக்கான முழுஉருவம் பெற்று நாடோடியாக காட்டுமிராண்டி அதாவது விலங்கு வாழ்க்கையையே ஆரம்பகாலத்தில் வாழ்ந்து பின்னர் கற்கருவிகள், நெருப்பு, சக்கரம், உலோகங்கள் என்று ஒவ்வொன்றாகக் கண்டுபிடித்து வாழ்வின் சவால்களைக்கடந்து வேளாண்மையைக் கண்டுபிடித்து பின் நிலையாக ஓரிடத்தில் வாழத்தொடங்கினான். நிலைபெற்ற வாழ்வானது மனித சமூகத்தை அடுத்த படிநிலைக்கு இட்டுச்சென்றது. உணவிற்காகவும், இருப்பிடத்திற்காகவும் அலைந்து கொண்டிருந்த மனிதன் உணவினை உற்பத்தி செய்யவும் அதனைச்சேமித்துப் பயன்படுத்தவும் பழகிய பின்னர் மீதமிருக்கும் நேரத்தினைப் பொழுதுபோக்கிற்காகச் செலவிடத் தொடங்கினான். அதன் பயனாகப் பல கலைகள் தோன்றின. இவ்வாறு பல நூற்றாண்டுகளைக் கடந்து இனக்குழுக்களாக வாழ்ந்த மனித இனம்

நிலைத்து வாழத்தொடங்கியபோது தத்தமது குழுக்களுக்கான எல்லைகளை வகுக்கத்தொடங்கியது. அவரவர்களுக்கென்று தனிப்பட்ட உணவுமுறைகள் பழக்கவழக்கங்கள் உணவுகள் என்று வேறுபாடுகள் இனக்குழுக்களுக்கிடையே காணப்பட்டன. இவ்வாறு வகுக்கப்பட்ட எல்லைகளையும் அவ்வந்நிலத்திற்கு அடிப்படையாக அமையக்கூடிய காலநிலைகளையும் அடிப்படையாகக்கொண்டு அங்கு பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

## தொல்காப்பியம்

தொல்காப்பியம் தமிழில் கிடைத்துள்ள முதல் இலக்கண நூல். இதன் ஆசிரியர் தொல்காப்பியர். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், அகப்பொருளினை ஏழுதிணைகளாகப் பகுக்கிறது. அவை கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை என்பனவாகும். இப்பகுப்பினை,

"கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுவாய்

முற்படக் கிளந்த எழுதிணை என்ப"

என்ற நூற்பா வரிகளில் முதலும் முடிவுமாகக் கூறப்படும் கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரு திணைகளுக்கு இடையே அன்பின் ஐந்திணைகள் அடங்கும் என்பதை உய்த்துணர்ந்து கொள்ளலாம் (Ilamporannar, 2008).

இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் கைக்கிளை யாதோ எனின், கை என்பது சிறுமை பற்றி வரும். அது தத்தம் குறிப்பிற் பொருள் செய்வதோர் இடைச்சொல் கிளை என்பது உறவு பெருமையில்லாத தலைமக்கள் உறவு என்றவாறு கைக்குடை, கையேடு, கைவாள், கை ஒலியல், கை வாய்க்கால் எனப் பெருமையில்லாதவற்றை வழங்குபவாதலின் (Ilamporannar, 2008).

நடுவண் ஐந்திணைக்கண் நிலமும் காலமும் கருப்பொருளும் அடுத்துப் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் எனச் சொல்லப்பட்ட அவ்உரிப்பொருள், ஒத்த அன்பும் ஒத்த குலனும் ஒத்த வடிவும் ஒத்த குணனும் ஒத்த செல்வமும் ஒத்த இளமையும் உளவழி நிகழுமாதலின், அது பெருங்கிளமை ஆயிற்று. முல்லை முதலாகிய ஐந்தும் முன்னர்க் கூறப்படும்.

பெருந்திணை நடுவண் ஐந்திணையாகிய ஒத்த காமத்தின் மிக்கும் குறைந்தும் வருதலானும், எண்வகை மணத்தினும் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்பன அத்திணை பாற்படுதலானும், இந்நான்கு மணமும் மேன்மக்கள்மாட்டு நிகழ்தலானும், இவை உலகினுள் பெருவழக்கு எனப்பயின்று வருதலானும், அது பெருந்திணை எனக்கூறப்பட்டது. அஃதேல் நடுவண் ஐந்திணையாகிய ஒத்த கூட்டம் பெருவழக்கிற்றன்றோ எனின், அஃது அன்பும் குலனும் முதலாயின ஒத்துவருவது உலகினுள் அரிதாகலின் அருகியல்லது வாராது என்க.

இந்நூலகத்து ஒருவனும் ஒருத்தியும் நுகரும் காமத்திற்குக் குலனும் குணனும் செல்வமும் ஒழுக்கமும் இளமையும் அன்பும் ஒருங்கு உளவழி இன்பம் உளதாம் எனவும், கைக்கிளை, ஒருதலை வேட்கை எனவும், பெருந்திணை ஒவ்வாக்கூட்டமாய் இன்பம் பயத்தல் அரிது எனவும் கூறுதலான், இந் நூலுடையார் காமத்துப் பயனின்மை உய்த்து உணர வைத்தவாறு அறிந்து கொள்க." என்று உரை இயற்றியுள்ளார்.

இளம்பூரணர் உரையானது ஆண் பெண்ணிற்கு இடையேயான ஒத்த அன்பு, குலம், குணம், செல்வம் முதலியவை இருந்தால் மட்டுமே அது சிறப்புடைய இன்பமளிக்கக்கூடிய "களவு", அவர்களே திருமணம் செய்து கொள்ளத் தகுதியுடையவர்கள் என்ற பொருண்மையைக் கட்டமைக்கிறது. ஆனால் தமிழ்ச்சமூகத்தின் தொடக்க காலத்தில் மக்களிடையே உயர்வு தாழ்வு இருந்ததற்கான சான்றுகள் எங்கும் கிடைக்கவில்லை. எனவே அவர்களின் திருமண முறையிலும் அன்பு ஒன்றைத் தவிர வேறு காரணங்கள் அடிப்படையாக இருக்க வாய்ப்பில்லை. "வட இந்தியாவில் சாதி இந்துக்களிடம் பெரும் வழக்காக இருக்கும் திருமணமுறை உயர்குலத்திருமணம் (hypergamy) ஆகும்." என்ற மானிடவியளாளர் கூற்றின் வழி, வட இந்தியர்களிடம் சாதிய உயர்வு x தாழ்வு என்ற பாகுபாடு இருந்துள்ளது அதன்

தாக்கம் அவர்களுடைய திருமண முறையிலும் வெளிப்பட்டு நாளடைவில் தமிழ்ச்சமூகத்தைச் சாதிய சமூகமாக மாற்றுவதற்கான அடிப்படையாக சாதிப்பற்றுமிக்க உரையாசிரியர்களுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது என்பதனை அறியலாம் (Bhakthavatsala Bharath, 2011).

தமிழர்களிடம் ஏற்றத்தாழ்வுகள் இருக்கவில்லை அவற்றின் அடிப்படையில் காதலும் திருமணமும் நடைபெறவில்லை என்பதைத் தென்னிந்தியப் பகுதியில் இக்கால்வழிக் குழுக்களிடையே எவ்வித உயர்வு தாழ்வும் இல்லை. அனைத்துமே சம தகுதியைக் கொண்டவை." என்ற கருத்தின் வழி அறியலாம். இளம்பூரணர் உரை சாதிய ஏற்றத்தாழ்வை ஏற்று எழுதியதாக உள்ளது (Bhakthavatsala Bharath, 2011).

## இறையனார் அகப்பொருள்

தொல்காப்பியத்திற்குப் பின்னர் முழுதிலக்கணம் தழுவாத பகுதியிலக்கண நூல்கள் தோன்றத் தொடங்கின. அவ்வகையில் அகப்பொருள் பற்றிக்கூறும் பிரதியாகத் தோன்றியது களவியல் எனப் பெயரிய இறையனார் அகப்பொருள் ஆகும். இந்நூலின் காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு என்று கருதப்படுகிறது. இதன் ஆசிரியர் இறையன். உரையாசிரியர் கடைச்சங்கப்புலவர் நக்கீரர். இப்பிரதியானது தொல்காப்பியத்திலிருந்து மாறுபட்டு ஐந்து திணைகளை மட்டுமே கூறுகிறது. மேலும், தமிழ் இலக்கணம் கூறும் இந்தப் பிரதியில் ஆரிய மணமுறைகளான பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், அசுரம், இராக்கதம், காந்தருவம், பைசாசம் என்பவை இடம்பெற்றுள்ளமை முரணாக அமைந்துள்ளது (Ilankumaran, 2013).

இச்செய்திகளை

"அன்பின் ஐந்திணைக் களவெனப் படுவது

அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள்

காந்தருவ வழக்கம் என்மனார் புலவர்"

என்ற சூத்திரத்தின் மூலம் அறியலாம் (Nakkheeran, 1939).

"மக்களின் அஞ்ஞானத்தையும், அச்சத்தையும் மூலதனமாகக்கொண்டு அவர்களை ஏமாற்றிப் பிழைக்கும் ஒரு எத்தர் கூட்டம்- புரோகிதக்கூட்டம் - அங்கே தேவையில்லை. அப்படிப்பட்ட புரோகிதக்கூட்டத்தை இனக்குழுவிற்கு அடுத்த சமுதாயம் உண்டாக்கியது" என்ற கூற்றுப்படி நோக்கும்போது "களவியல்" இனக்குழுச் சமூகம் சிதைவடைந்த பின்னர் தேன்றியது என்று கருதுவதற்கு இடமுண்டு (Rahul Sankrityayan, 2017). சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள் அவ்வக்கால நூல்களில் வெளிப்படும் என்பதற்குச்சான்றாக இந்நூல் அமைகிறது.

## வீரசோழியம்

வீரசோழியத்தின் காலம் கி.பி.11ஆம் நூற்றாண்டு என்று ஆய்வாளார்கள் கருதுகின்றனர். இந்நூலின் ஆசிரியர் புத்தமித்திரர். உரையாசிரியர் பெருந்தேவனார். இவர் பாரதம் பாடியவர் அல்ல. இந்நூல், பொருள்களை அகத்திணை, புறத்திணை என்று பகுக்காமல் தொகையாக அகம், புறம், அகப்புறம், புறப்புறம் என்னும் நான்கினைக் குறிப்பிடுகிறது. மேலும் இந்நான்கு பொருள்களும் இருபத்தைந்து நிலத்தினும் அடங்கும் என்று பதிவு செய்துள்ளது.

பொருள்களின் தொகை நான்கு என்பதனை,

"ஆற்று மகமே புறமே யகப்புற மன்றிவென்றி

போற்றும் புறப்புற மென்றாம் பொருள் அளப் பானளவை

ஏற்றும் பிரமேய மென்றும் வகுப்பர் இவையுமன்றிச்

சாற்றும் புலவரு மெண்ணிறந் தாரென்பர் தாழ்குழலே!”

என்ற நூற்பாவும், அவற்றின் விரிவாக,

“முல்லை குறிஞ்சி மருதத் தொடுமுது பாலைநெய்தல்

சொல்லிய காஞ்சி சுரநடை கைக்கிளை பாலைதும்பை

இல்லவண் முல்லை தபுதாரந் தாபத மேய்ந்தவள்ளி

அல்லது காந்தள் குறுங்கலி வெட்சி யடல்வஞ்சியே

குற்றிசை வாகை கரந்தை பெருந்திணை கொற்றநொச்சி

பற்றிய பாசறை முல்லை யுழி” யெனப்பகர்ந்த

மற்றிவை யைந்து மாம்பொருள் நான்கினும் வண்புகட்சி

பற்றிய பாடாண் பொதுவிய லாதியும் பார்த்தறியே”

என்ற நூற்பாவும் குறிக்கப்பட்டுள்ளது (Govindaraja Muthaliyar, 1970). இந்நூலில் “திணை” என்ற சொல் இடம் பெறவில்லை.

## நம்பியகப் பொருள்

வீரசோழியத்திற்குப் பிந்தையதான அகப்பொருள் விளக்கம் என்னும் நம்பியகப்பொருள் கி.பி. 13ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தது என்பர். இந்நூலின் ஆசிரியர் நாற்கவிராசநம்பி. இவரே இந்நூலிற்கு உரையும் எழுதியுள்ளார் (Chennappan, 2021). இந்நூல் தொல்காப்பியத்தைப் போன்றே அகப்பொருளை ஏழு வகையாகக் குறிப்பிடுகின்றது. இதனை,

“மலர்தலை உலகத்துப் புலவோர் ஆய்ந்த

அருந்தமிழ் அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை

பெருந்திணை யெனவெழு பெற்றித் தாகும்”

என்ற நூற்பாவின் மூலம் உணரலாம். அதாவது விரிந்த இந்த உலகில் தமிழ் ஆய்ந்த புலவர்கள் குறிப்பிடும் அகத்திணையானது ஏழு என்று நாற்கவிராசநம்பி குறிப்பிடுகிறார் (Narayana Velluppillai, 2015).

## இலக்கண விளக்கம்

இலக்கண விளக்கம் கி.பி. 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பர். இந்நூலின் ஆசிரியர் வைத்தியநாத தேசிகர். நூலாசிரியரே உரையாசிரியரும் ஆவார். அகம் என்பது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றனுள் இன்பத்தைத் தரக்கூடிய, உள்ளத்துள் நிகழக்கூடிய ஒழுக்கமாகும். இதனை,

“அகமெனப் படுவது வகைஒரு மூன்றனுள்

இன்பம் என்னும் இயல்பிற்று ஆகி

அகத்துநிகழ் ஒழுக்கம் ஆதல் வேண்டும்”

என்ற நூற்பா குறிப்பிடுகிறது.

அகத்திணை கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்று ஏழாகும் என்பதற்கு

“அதுவே கைக்கிளை ஐந்திணை ஏனைப்

பெருந்திணை எனஎழு பெற்றித்து ஆகும்”

என்ற நூற்பாவினைக் கொண்டு அறியலாம் (Vaithiyanatha Desigar, 1972).

இலக்கணவிளக்கமும் தொல்காப்பிய வழிவந்த மரபில் அகத்திணை ஏழு என்பதையே குறிப்பிடுகிறது.

## தொன்னூல் விளக்கம்

தொன்னூல் விளக்கம் கி.பி. 18ஆம் நூற்றண்டில் எழுதப்பட்டதாகக் கணிக்கப்படுகிறது. இந்நூலின் ஆசிரியர் வீரமாமுனிவர். இவரே உரையும் எழுதியுள்ளார். மற்ற இலக்கணப் பிரதிகளில் கூறப்பட்டதுபோல் அல்லாமல் பொருளதிகாரத்தில், கற்றோர் பிறருக்குப் பயன்படும் வகையில் விரித்துரைக்கத்தகும் பொருளெல்லாம் வழக்கு, தேற்றம், தோற்றம் என்னும் மூவகையில் அடங்கும் என்றும் மற்ற தமிழ்ப்புலவர்கள் கூறியுள்ள அகத்திணை சிற்றின்பம் என்றும் தொன்னூல் சுட்டுகிறது.

“புலவராலுரைக்கத் தகும் பொருளாவன அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு. இவற்றுள் பொருள்நூல் தந்த செந்தமிழுணர்ந்தோர் மற்றயாவுமொழிய அகப்பொருளெனச் சிற்றின்பமொன்றையும் புறப்பொருளெனப் படைச்சேவம் ஒன்றையும் குறிப்பிட்டுள்ளனர் (Veeramamunivar, 2001).”

பொருள் பாகுபாட்டை,

“வழக்குத் தேற்றந் தோற்ற மெனவும்

மூவகைப்படுமா மொழியும் பொருளே”

என்ற நூற்பா சுட்டுகிறது (Veeramamunivar, 2001). அதாவது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் பொருள் பற்றி உணர்ந்தோர் பிறருக்கு விரித்துரைக்கத்தகும் பொருளெல்லாம் வழக்கு, தேற்றம், தோற்றம் எனும் மூன்று வகையிலேயே அடங்கும் என்று குறிப்பிடுகிறது. இம்மூன்று பொருள்களும் கருதிய பயனையடைய சொல்லத்தகும் பொதுவழியாக பதிகம், காரணம், பரவு, தொகை, துணி என்று ஐந்தை இவ்விலக்கணம் சுட்டுகிறது.

அதற்கான நூற்பா,

“பதிகங் காரணம் பரவு தொகைதுணி

வைந்து மெலாப்பொருட் காம்பொது வழியே”

என்பதாகும் (Veeramamunivar, 2001). இவற்றுள் இரண்டாவதான ‘காரணம்’ என்ற சொல்லின் வகையாக அச்சொல்லினால் பொருளைக் காட்டுவதற்குதவும் நியாயங்களாக அகத்திணை, புறத்திணை ஆகிய இரண்டும் சுட்டப்பட்டுள்ளன. இதனை,

“காரண வழியெனக் காட்டுரைப் பொருட்குறி

யகத்திணை புறத்திணை யாமிரு வகைத்தே”

என்ற நூற்பா உணர்த்துகிறது (Veeramamunivar, 2001).

அகத்திணையானது, இயல்பு, வகை, பொது, சிறப்பு, உவமை, புறநிலை, எதிர்நிலை, கருவி, காரியம், காரணம், முன் கூறியவை, பின்னர் கூறியவை என்று பன்னிரெண்டாகும் என்பதனை,

“அகத்திணை யியல்பே யறைபடும் வகையே

பொதுச்சிறப் புவமை புறநிலை யெதிர்நிலை

கருவி காரியங் காரக முன்னவை

பின்னவை யெனவாம் பிரிவீ ராறே”

என்ற நூற்பா எடுத்துரைக்கிறது. உள்ளத்தால் அடையக்கூடிய இன்பம் பேரின்பமாகக் கருதப்பட்ட காலம் மாற்றம் பெற்று சமயங்கள் உள்நுழைந்து மனிதன் அனுபவிக்கும் இன்பத்தை சிற்றின்பமென்றும் வீடுபேறு அடைவதே பேரின்பம் என்றும் கற்பிக்கப்பட்ட காலத்தில் தோன்றிய இலக்கணமாதலால் அப்போக்கு மிகப்பெரும் மாற்றமாக நூலில் வெளிப்பட்டுள்ளது (Veeramamunivar, 2001).

## முத்துவீரியம்

கி.பி. 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது முத்துவீரியம். இந்நூலின் ஆசிரியர் முத்துவீரிய உபாத்தியாயர். உரையாசிரியர் திருப்பாற்கடனாதன் கவிராயர். இந்நூலும் தொல்காப்பியத்தைப் போன்றே அகப்பொருளினை ஏழாகப் பகுக்கிறது. இதனை,

"அகப்பொருள் கைக்கிளை யைந்திணை பெருந்திணை

எனவெழு வகைப்படு மென்மனார் புலவர்"

என்னும் நூற்பா வழி அறியலாம் (Muthuveera Upathiyar, 1972).

## முடிவுரை

தொல்காப்பியம் அகத்திணையினை ஏழு வகையாகக் குறிப்பிட்டுள்ளது. இறையனார் களவியல் கைக்கிளை, பெருந்திணையினை விடுத்து ஐந்து திணைகளை மட்டுமே பதிவுசெய்துள்ளது. வீரசோழியத்தில் திணை என்ற சொல் இடம்பெறவில்லை. பொருள்களை அகம், புறம், அகப்புறம், புறப்புறம் என்று நான்கு தொகையாகப்பகுத்து குறிப்பிட்டுள்ளது. அடுத்தடுத்து இயற்றப்பட்ட இலக்கண நூல்களான நம்பியகப்பொருள், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆகிய நூல்கள் அகத்திணையினை ஏழு என்றே குறிப்பிட்டுள்ளன. தொன்னூல் விளக்கம், கற்றோர் பிறருக்குப் பயன்படக்கூடிய வகையில் விரித்துரைப்பதே பொருள் என்ற புது விளக்கத்தினை முன் வைக்கிறது. அறம், பொருள், இன்பம், வீடுபேறு குறித்து அறிந்தவர்கள் பிறருக்கு விரித்துரைப்பதே அன்றி உள்ளத்து நிகழ்வாகிய சிற்றின்பங்கள் பொருளன்று என்று குறிப்பிடுகிறது. தொன்னூல் விளக்கம் காட்டும் விளக்கமானது அக்காலத்தில் சமூகத்தில் ஏற்பட்டிருந்த சமயத்தாக்கத்தின் வெளிப்பாடாக உள்ளது. ஒவ்வொரு இலக்கணப்பிரதியும் சமூகத்தில் காலூன்றத்தொடங்கிய ஆதிக்க உணர்வுகளை பிரதிபலிப்பதாக உள்ளது.

## References


Bhakthavatsala Bharathi, S. (2011) Tamilar Manudaviyal, Meiyappan Pathipagam, Chennai, India.

Chennappan, M. (2021) The way of life that shows Nambiyaga Porul, International Research Journal of Tamil, 3(3), 108-113. https://doi.org/10.34256/irjt21315

Govindaraja Muthaliyar, (1970) Veerasozhiyam, Appar Press, Madurai, India.

Ilamporannar, (2008) Tholkkappiyam Porullthigaram, Saratha Padhipagam, Chennai, India.

Ilankumaran, R. (2013) Ilakkana Varalaru, Tamilmann Pathippagam, Chennai, India.

Muthuveera Upathiyar, (1972) Muthuveeriyam, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Nakkheeran, (1939) Iraiyanar Akapporul, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Narayana Velluppillai, M. (2015) Nambiyagap Porul Thelivurai, Mulai Niliyam, Chennai, India.

Rahul Sankrityayan, (2017) Manitha Samuthayamum, New Century Book House, Chennai, India.

Vaithiyanatha Desigar, (1972) Ilakkana Vilakkam, Thanjai Sarswathi Mahal Veeliyeedu, Chennai, India.

Veeramamunivar, (2001) Thonnool Villakkam, Saradha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License